'இயக்குனர் இமயம்' என்று மக்களால் அழைக்கப்பட்ட

# இயக்குனர் பாரதிராஜா மறைவு!

## கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் – எதிர்க்கட்சித் தலைவர் உதயநிதி ஸ்டாலின் – திரையுலகினர் நேரில் அஞ்சலி!



சென்னை, ஜூன் 12 -

**தமிழ் சினிமாவில் இயக்குனர் இமயம் என அழைக்கப்பட்ட இயக்குனர் பாரதிராஜா அவர்கள், (வயது 84), உடல்நலக்குறைவால் நேற்று முன்தினம் (10.6.2026-புதன்கிழமை) காலை இயற்கை எய்தினார் என்பதை அறிவிக்க பெரிதும் வருந்துகிறோம்.**

இச்செய்தியறிந்ததும் கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின், சட்டமன்ற எதிர்க்கட்சித் தலைவர் உதயநிதி ஸ்டாலின் உள்பட அரசியல் கட்சித் தலைவர்கள், திரையுலக பிரமுகர்கள் திரளாகச் சென்று மறைந்த இயக்குனர் பாரதிராஜா அவர்களின் உடல் மீது மலர் மாலை வைத்து இறுதி அஞ்சலி செலுத்தினர்.

தேனி மாவட்டம் அல்லிநகரத்தில் 1941ம் ஆண்டு ஜூலை 17ல் பிறந்தவர் பாரதிராஜா. இவருக்கு சகோதரிகள் மூவர். சகோதரர்கள் மூவர். பாரதி ராஜாவின் இயற்பெயர் சின்னசாமி ஆகும். சினிமா மீதுள்ள ஆர்வத்தால் சென்னைக்கு வந்த பாரதிராஜா, இயக்குநர் பிபுல்லையாவிடம் உதவி யாளராக பணிபுரியும் வாய்ப்பு கிடைத்தது. அதன் பின் பிரபல கன்னட இயக்குநரான புட்டண்ணா கனகலிடம் சேர்ந்து சினிமாவின் நுணுக்கங்கள் அனைத்தையும் கற்றார்.

16 வயதினிலே படத்தின் மூலம் இயக்குநராக அறிமுகம் ஆனார். தொடர்ந்து கிழக்கே போகும் ரயில், சிகப்பு ரோஜாக்கள், டிக் டிக் டிக், காதல் ஓவியம், வாலிபமே வாவா, மண் வாசனை, புதுமைப்பெண், ஒரு கைதியின் டைரி, முதல் மரியாதை, கடலோர கவிதைகள், வேதம் புதிது, கொடி பறக்குது, என்னுயிர் தோழன், புது நெல்லு புது நாத்து, நாடோடி தென்றல், கேப்டன் மகள், கிழக்கு சீமையிலே, கருத்தம்மா, பசும்பொன், தமிழ் செல்வன், அந்தி மந்தாரை, தாஜ்மகால், கடல் பூக்கள், ஈரநிலம், கண்களால் கைது செய், பொம்மலாட்டம், அன்னக்கொடி, மீண்டும் ஒரு மரியாதை உள்ளிட்ட படங்களை இயக்கி உள்ளார்.

ஸ்டுடியோவுக்குள் நடந்த சினிமாவை கிராமத்துக்கு அழைத்து சென்று மண்வாசனையுடன் படத்தை கொடுத்தவர். இயக்கம் தாண்டி தயாரிப்பாளர், நடிகர் என பன்முகத் திறமை கொண்டவர் பாரதிராஜா பல்வேறு நடிகர், நடிகைகளை அறிமுகப்படுத்தியவர் என்ற பெருமைக்குறியவரும் ஆவார்.

மகன், நடிகர் மனோஜ் குமார் மறைவுக்கு பின் மனதளவிலும், உடலளவிலும் பாதிக்கப்பட்ட பாரதிராஜா சில மாதங்கள் மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வந்தார். ஒரு மாதத்திற்கு முன் வீடு திரும்பிய அவர் வீட்டில் ஓய்வெடுத்து வந்தார். இந்நிலையில் நேற்று முன்தினம் (10.6.2026) அதிகாலை இயக்குனர் பாரதிராஜா அவர்கள் மறைவுற்றார்.

பாரதிராஜா மறைவுக்கு கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின், சட்டமன்ற எதிர்க்கட்சித் தலைவர் உதயநிதி ஸ்டாலின், மதிமுக பொதுச் செயலாளர் வைகோ, நாம் தமிழர் கட்சித் தலைவர் சீமான், கவிப்பேரரசு வைரமுத்து, சூப்பர் ஸ்டார் ரஜினிகாந்த், கலைஞானி கமலஹாசன் எம்.பி., புரட்சி தமிழன் சத்தியராஜ் உள்பட பல்வேறு அரசியல் கட்சித் தலைவர்கள், திரையுலகினர், பொது மக்கள் நேரில் சென்று அஞ்சலி செலுத்தினர்.

### கலைஞர் தொலைக்காட்சியில் தொடர்களை இயக்கியவர்!

முத்தமிழறிஞர் கலைஞர் மீது மிகுந்த அன்பும், பற்றும் கொண்ட இயக்குநர் இமயம் பாரதிராஜா வெள்ளித்திரை மட்டுமின்றி சின்னத் திரையிலும் ஜொலித்துள்ளார். கலைஞர் தொலைக் காட்சியில் 3 வெற்றி தொடர்களை இயக்கியுள்ளார்.

வெள்ளித்திரையில் 40க்கும் மேற்பட்ட திரைப்படங்களை இயக்கியும், 20க்கும் மேற்பட்ட திரைப்படங்களில் நடித்தும் தமிழ் மக்களை பெரிதும் கவர்ந்தவர் இயக்குநர் இமயம் பாரதிராஜா... வெள்ளித்திரையில் வெற்றிகள் பல படைத்த அவர், சின்னத்திரையிலும் ஜொலித்தார். முத்தமிழறிஞர் கலைஞர் மீது மிகுந்த அன்பும், பற்றும் கொண்ட பாரதிராஜா, கலைஞர்தொலைக்காட்சியில் 3 தொடர்களை இயக்கி ரசிக பெரு மக்களை கவர்ந்திழுத்தார். 2008ஆம் ஆண்டு முதல், கலைஞர் தொலைக் காட்சிக்காக தொடர்களை இயக்கினார்.. பாரதிராஜாவின் புகழ்பெற்ற திரைப் படமான 'முதல் மரியாதை'யின் தலைப்பிலேயே கலைஞர் தொலைக் காட்சிக்காக ஒரு தொடரையும் இயக்கினார். இந்த தொடர் மிகப்பெரிய வெற்றியை பெற்றது.. இதேபோல், கிராமத்துப் பின்னணியில், "தெக்கத்தி பொண்ணு" மற்றும் கிராமத்து மக்களின் வாழ்க்கை முறை, உறவுகள் மற்றும் கலாச்சாரத்தை மையமாக வைத்து "அப்பனும் ஆத்தாளும்" ஆகிய நெடுந்தொடர்களும் கலைஞர் தொலைக்காட்சியில் வெற்றி காவியம் படைத்தது. வெள்ளித்திரையை போன்று சின்னத்திரையிலும் கலைஞர் தொலைக்காட்சி மூலம் கிராமங்களின் மண்வாசத்தையும், உறவுகளின் நேசத்தையும் அனைவரின் வீடு களுக்கும் கொண்டு சேர்த்து முத்திரை பதித்தார் பாரதிராஜா. சின்னத்திரையில் கலைஞர் தொலைக்காட்சிக்கு மட்டுமே நெடுந்தொடர்களை பாரதிராஜா இயக்கினார். பாரதிராஜா இயக்கிய இந்த 3 நெடுந்தொடர்களும் முத்தமிழறிஞர் கலைஞரின் கைவண்ணத்தால் உருவான வசந்த காவியங்க ளாகும்.

### இயக்குனர் அமிர்தம் இரங்கல்!

இயக்குநர் அமிர்தம் வெளியிட்டுள்ள இரங்கல் செய்தியில்,

தமிழ்த்திரையுலகில் புதுமையை அருமையாகப் புகுத்தி பெருமைப்பட வைத்தவர் பாரதிராஜா !

பாரதிராஜாவின் மறைவு மறக்க முடியாதது; ஈடுசெய்ய முடியாதது என்றும் இரங்கல் தெரிவித்துள்ளார்.

### இறுதி ஊர்வலம்!

மறைந்த இயக்குனர் பாரதிராஜா அவர்களின் இறுதி ஊர்வலம் - அரசு மரியாதையுடன் நேற்று (11.6.2026) மாலை 3 மணிக்கு தேனியில் உள்ள அவரது சொந்தத் தோட்டத்தில் இறுதிச் சடங்குகள் நடைபெற்றன.

---

'என் இனிய தமிழ் மக்களே' என்ற அவரின் குரல் என்றும் ஒலித்துக் கொண்டே இருக்கும்!

# தமிழ் சினிமாவில் புதுப்பாய்ச்சலை ஏற்படுத்தியவர் பாரதிராஜா!

## சட்டமன்ற எதிர்க்கட்சித் தலைவர் உதயநிதி ஸ்டாலின் இரங்கல்!



சென்னை, ஜூன் 12 -

'இயக்குநர் இமயம்' பாரதிராஜா மறைவுக்கு இரங்கல் தெரிவித்து எதிர்க்கட்சித் தலைவர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் வெளியிட்டுள்ள சமூக வலைதளப் பதிவில், 'என் இனிய தமிழ் மக்களே' என்ற அவரின் குரல் என்றும் ஒலித்துக் கொண்டே இருக்கும் என்றும்; தமிழ்ச் சினிமாவில் புதுப் பாய்ச்சலை ஏற்படுத்தியவர் என்றும் குறிப்பிட்டுள்ளார்.

இதுகுறித்து அவரது பதிவு வருமாறு:-

தமிழ்த்திரையுலகின் தனிப்பெரும் ஆளுமை 'இயக்குநர் இமயம்' பாரதி ராஜா சாரின் திருவுடலுக்கு நீலாங்கரை யில் உள்ள அவரது இல்லம் சென்று மாலை வைத்து அஞ்சலி செலுத்தி னோம்.

சிகிச்சை முடித்து வீடு திரும்பியவர், எப்படியும் மீண்டு வருவார் என்று எதிர் பார்த்த நிலையில், அவரது மரணச் செய்தி இன்று காலை பேரிடியாக வந்தது.

முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர் களின் பாசத்திற்குரிய இயக்குநர். நம் கழகத் தலைவர் அவர்களின் மீது மிகுந்த அன்பு கொண்டிருந்தவர்.

எளிய மக்களின் வாழ்க்கையை - உணர்வைப் பிரதிபலித்து, தமிழ்ச் சினி மாவில் புதுப்பாய்ச்சலை ஏற்படுத்திய பாரதிராஜா சாரின் மறைவு, கலையுல கிற்கு ஈடு செய்ய முடியாத பேரிழப்பு.

அரங்கிற்குள் இருந்த சினிமாவை வயல்வெளிக்கும் - கடற்கரைக்கும் - கிராமங்களுக்கும் எடுத்துச் சென்ற வித்தைக்காரர்.

எக்காலத்திற்கும் நிலைத்திருக்கும் படைப்புகளைத் தந்து, திறமையான கலைஞர்கள் பலரை தமிழ் சினிமாவில் அறிமுகப்படுத்திய பெருமைக்குரியவர்.

பாரதிராஜா சாரின் மறைவிற்கு எனது ஆழ்ந்த இரங்கலையும் அவரது குடும்பத்தினர், ரசிகர்கள், நண்பர்கள் அனைவருக்கும் என் ஆறுதலையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

'என் இனிய தமிழ் மக்களே' என்ற மண் வாசனை மிகுந்த அவரது குரல் நம் செவிகளில் என்றுமே ஒலித்துக் கொண்டு இருக்கும். பாராதிராஜா சார், அவர் படைப்பு களின் வழியே என்றும் நம்மிடையே வாழ்ந்து கொண்டிருப்பார்.

இவ்வாறு எதிர்க்கட்சித் தலைவர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் பதிவிட் டுள்ளார்.

---

முதல்வர் விஜய் அறிவித்த

# விவசாயிகள் கடன் தள்ளுபடி வெந்த புண்ணில் வேல்பாய்ச்சுவதாக உள்ளது!

## முன்னாள் அமைச்சர் கே.ஆர்.பெரியகருப்பன் பேட்டி!



சிவகங்கை, ஜூன் 12 -

சிவகங்கை மாவட்டம் பாகனேரி அருகே உள்ள நகரம்பட்டியில் சுதந்திர போராட்ட வீரர் வாளுக்கு வேலி அம்பலம் பிறந்தநாள் விழாவில் அவரது திருவு ருவச் சிலைக்கு முன்னாள் அமைச்சர் - சிவகங்கை மாவட்டக் கழகச் செயலா ளர் கே.ஆர்.பெரியகருப்பன் மாலை அணிவித்து மரி யாதை செலுத்தினார்.

பின்னர் செய்தியாளர் களிடம் கூறியதாவது:-

சிவகங்கை சீமையை ஆட்சி புரிந்த மாமன்னர் மருது சகோதரர்கள் நாட் டின் சுதந்திர போராட்டத் திற்காக பாடுபட்டார்கள். அவர்களை ஆங்கிலேயர் கள் சிறை பிடித்து திருப்பத் தூரில்தூக்கிலிடப்படுவதாக அறிவித்தார்கள். அவர்களை காப்பாற்றுவதற்காக பாக னேரி அருகே உள்ள நகரம் பட்டி கிராமத்தைச் சேர்ந்த வாளுக்கு வேலி அம்பலம் அவரது ஆட்களுடன் சென்று மருதுபாண்டியர் களை காப்பாற்ற சென்ற பொழுது கத்தப்பட்டு என்ற ஊரின் அருகே ஆங்கி லேயர்களால் சிறை பிடிக் கப்பட்டு வீர மரணம் அடைந்தார். அத்தகைய வீர மரணம் அடைந்து நாட்டின் சுதந்திரத்திற்காக போராடிய வாளுக்கு வேலி அம்பலம் மரணமடையாதி ருந் தால் மாமன்னர் மருது பாண்டியர்கள் காப்பாற்றப் பட்டிருப்பார்கள் என்று கூறப்படுகிறது.

அவரது நினைவினை போற்றும் வகையில் எதிர் கால சந்ததியினர் சுதந்திர போராட்டத்திற்காக பாடு பட்டவர்களை தெரிந்து கொள்ளும் வகையில் நகரம் பட்டியில் வாளுக்கு வேலி அம்பலம் சிலை அமைக்க வேண்டும் என்று அப்பகுதி மக்கள் முந்தைய அ.தி. மு.க.ஆட்சியில் கோரிக்கை விடுத்தார்கள்.

அவர்களின் கோரிக் கையை கடந்த 10 ஆண்டு களாக அ.தி.மு.க ஆட்சியில் ஏற்கவில்லை. இதுகுறித்து நான் சட்டமன்றத்தில் பல முறை பேசியும் எவ்வித முன்னேற்றம் ஏற்பட வில்லை அப்போதைய அ.தி.மு.க. ஆமைச்சர் பாஸ் கரன் எந்த முயற்சியும் எடுக் கவில்லை. கழகத் தலைவர் - முன்னாள் முதல்வர் தளபதி தலைமையிலான ஆட்சி அமைந்ததும் நகரம் பட்டி கிராம மக்களின் கோரிக்கையான வாளுக்கு வேலி அம்பலம் வரலாற் றினை எடுத்துக் கூறினேன்.

சிறுகதை மன்னர் எஸ். எஸ்.தென்னரசு அவர்கள் எழுதிய செம்மாதுளை என்ற நூலில் அடிப்படை யில் தலைவர் கலைஞர் அவர்கள் எழுதிய தென் பாண்டி சிங்கத்தில் வாளுக்கு வேலி அம்பலம் பற்றி குறிப்பிடப்பட்டுள்ள தையும் கழகத் தலைவரிடம் கூறினேன்.

அதன் பேரில் நகரம்பட் டியில் அரசின் சார்பில் ருபாய் 50 லட்சம் செலவில் சிலை அமைக்கப்படும் என்று கழகத் தலைவர் அவர்கள் அறிவித்தார்கள். இதற்கான ஏற்பாடுகளை யும் அப்போதைய அமைச் சர் வெள்ளகோவில் சாமி நாதன் தீவிர முயற்சி எடுத் ததன் பேரில் ரூபாய் 50 லட்சத்தில் வாளுக்கு வேலி அம்பலம் சிலை அழகாக அமைக்கப்பட்டு அப்போ தைய முதல்வர் மு.க. ஸ்டாலின் அவர்களால் திறந்து வைக்கப்பட்டது.

மேலும் ஆண்டுதோறும். ஜூன் 10ஆம் தேதி வாளுக்கு வேலி அம்பலம் பிறந்த நாளை அரசு விழா வாக கொண்டாடப்படும் என்று கழகத் தலைவர் அவர்கள் அறிவித்தார்கள்.

அதன்படி நேற்று முன் தினம் நகரம்பட்டியில் வாளுக்கு வேலி அம்பலம் திருவுருவச் சிலைக்கு என் தலைமையில் மாவட்ட கழக நிர்வாகிகள் மலர் மாலை அணிவித்து மரி யாதை செலுத்தினோம். இத்தகைய வீர வரலாற்று போராட்ட வீரர்களை நாம் அனைவரும் எதிர்கால சந்த தியினர் அவசியம் தெரிந்து கொள்ள வேண்டும் . தமிழ் இனத்திற்காக, தமிழ் மொழிக்காக,தமிழ் வளர்ச் சிக்காக உயிர் நீத்தவர்கள், நாட் டின் சுதந்திர த்திற்காக போராடி தன்னுயிர் நீத்த போராட்ட வீரர்களை கழக அரசு என்றுமே மதித்து அவர்களை கௌரவப்ப டுத்தி இருக்கிறது.

பேரறிஞர் அண்ணா, தலைவர் கலைஞர் வழியில், கழக தலைவர் தளபதி அவர் களும் இத்தகைய தொடர் நடவடிக்கைகளில் ஈடு பட்டு ஏராளமான சுதந்திர போராட்ட வீரர்கள், தமிழ் மொழிக்காக உயிர் நீத்தவர் கள் பெருமைப்படுத்தப்பட் டுள்ளார்கள். தற்போதைய முதல்வர் விஜய் அவர்கள் தனது தேர்தல் வாக்குறுதி யாக விவசாயிகளுக்கான கடன் தள்ளுபடி செய்யப்ப டும் என்று அறிவித்தார். ஆனால் அவர்களது தற்போ தைய அறிவிப்பு ரூபாய் ஒரு லட்சம் கடன் வாங்கி களுக்கு ஐந்தாயிரம் கடன் தள்ளுபடி என்று அறிவிக் கப்பட்டுள்ளது.

இது விவசாயிகளை ஏமாற்றும் செயலாகும். இந்த அறிவிப்பு வெந்த புண்ணில் வேல் பாய்ச்சுவது போன்ற உள்ளது. ரூபாய் 95 ஆயிரம் கடன் கட்டுப வர்கள் ஐந்தாயிரம் கட்டு வது பெரிதல்ல. இது அவர் களை ஏமாற்றும் செய லாகும்.

கழகத் தலைவர் தளபதி ஆட்சியில்ருபாய் 12 ஆயி ரத்து 800 கோடி விவசாய கடன் தள்ளுபடி,ருபாய் ஐந்து பவன் நகைக்கடன் தள்ளுபடி ,சுய மகளிர் குழு கடன் ருபாய் 10,500 கடன் ஆக மொத்தம் 20 ஆயிரம் கோடிக்கு மேல் கடன் தள்ளுபடி செய்யப்பட் டுள்ளது.

நிதிநிலை பிரச்சினை இருந்தாலும் விவசாயி களுக்கான தேர்தல் அறி வித்த வாக்குறுதியை முதல் வர் விஜய் நிறைவேற்ற வேண்டும். ஆனால் அவர் நிறைவேற்றுவாரா என்பது விவசாயிகளிடையே சந்தே கம் உள்ளது.

இவ்வாறு மாவட்டக் கழ கச் செயலாளர் கே.ஆர். பெரியகருப்பன் கூறினார்.

பேட்டியின் போது முன் னாள் அமைச்சர் திருமதி தமிழரசிரவிக்குமார், மாவட்ட துணைச் செயலா ளர் த.சேங்கைமாறன், மாவட்ட சுற்றுச்சூழல் அணி அமைப்பாளர் எஸ் எஸ்.ஏ.வல்லபாய், ஒன்றிய செயலாளர் ஆர்.எம்.கென் னடி மற்றும் நிர்வாகிகள் உடன் இருந்தார்கள்.

---

# திண்டிவனத்தில் முத்தமிழ் அறிஞர் கலைஞர் பிறந்தநாள் விழா பொதுக்கூட்டம்!

## செஞ்சி மஸ்தான் – மதிவதனி சிறப்புரை!

திண்டிவனம், ஜூன் 12 -

முத்தமிழ் அறிஞர் கலை ஞர் அவர்களின் 103 வது பிறந்தநாள் - திராவிடர் எழுச்சி நாள் விழா பொதுக் கூட்டம் நேற்று திண்டி வனத்தில் நடைபெற்றது.

இதில் விழுப்புரம் வடக்கு மாவட்டப் பொறுப்பாளர் செஞ்சி மஸ்தான், திராவிட கழகத் தின் துணைப் பொதுச் செயலாளர் மதிவதனி ஆகி யோர் கலந்து கொண்டு சிறப்புரையாற்றினர்.

முத்தமிழ் அறிஞர் கலை ஞர் அவர்களின் 103 வது பிறந்தநாள் விழாவை திரா விட கழகத்தின் சார்பில் திராவிட எழுச்சி நாள் விழா பொதுக்கூட்டம் நேற்று (11.6.2026-வியாழக் கிழமை) மாலை 6 மணி அளவில் விழுப்புரம் மாவட்டம் திண்டிவனம் வண்டிமேடு அருகில் நடை பெற்றது.

கூட்டத்திற்கு திண்டி வனம் மாவட்ட தலைவர் அன்பழகன் தலைமை தாங்கினார். திண்டிவனம் மாவட்டச் செயலாளர் இளம்பருதி அனைவரை யும் வரவேற்றார்.

திராவிடர் கழக நிர்வாகி கள் பரந்தாமன், ராதா, நவா. ஏழுமலை, அன்புக் கரசன், பெருமாள், துரை. திருநாவுக்கரசு, விஜய லட்சுமி, வில்லவன் கோதை, பச்சையப்பன், பன்னீர்செல்வம், ரமேஷ், தேவராஜ், ஓவியர் செந் தில், கோபு ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

கூட்டத்தில் விழுப்புரம் வடக்கு மாவட்ட தி.மு.க. பொறுப்பாளரும் முன் னாள் அமைச்சர் செஞ்சி மஸ்தான், திராவிடர் கழ கத்தின் துணைப் பொதுச் செயலாளர் சே. மெ.மதிவ தனி ஆகியோர் கலந்து கொண்டு சிறப்புரையாற்றி னர்.

கூட்டத்தில் தோழமை கட்சி நிர்வாகிகள்சுப்ர மணியன், சௌரிராஜன், வெங்கடேசன், மலைச் சாமி, பாபு கோவிந்தராஜ், ஏ.எம்.ஆர்.சையது ஹாசன், பாண்டியன், கலையரசு, வேலு வள்ளுவன், தி.மு.க. நிர்வாகிகள் முன்னாள் சட்டமன்ற உறுப்பினர்கள் டாக்டர் மாசிலாமணி, சேது நாதன், சீத்தாபதி சொக்கலிங்கம், மாவட்ட அவைத் தலைவர் டாக்டர் சேகர், பொருளாளர் ரம ணன், மாவட்டத் துணைச் செயலாளர் ரவிக்குமார், ஒலக்கூர் ஒன்றிய பெருந்த லைவர் சொக்கலிங்கம், செயற்குழு உறுப்பினர் சீனி சின்னசாமி, ஒன்றிய செயலாளர்கள் ராஜாராம், தயாளன், பழனி, ரவிச்சந்தி ரன், மணிமாறன்,

செழியன், முன்னாள் மாவட்ட துணை செயலா ளர் அசோகன், பொதுக்குழு உறுப்பினர் கதிரேசன், திண்டி வனம் நகர செயலா ளர் ஆசிரியர்கண்ணன், முன்னாள் நகர் செயலாளர் கபிலன், இளைஞர் அணி துணை அமைப்பாளர்கள் டி.கே.பி. ரமேஷ், எம்.டி. பாபு, நகர அவைத்தலைவர் ரவிச்சந்திரன், நகர கழக பொருளாளர் ராஜேந்தி ரன், மாவட்டப் பிரதிநிதி வி.எஸ்.முருகன், மாவட்ட துணை அமைப்பாளர் சுபாஷ் சந்திரபோஸ், நகர மன்ற உறுப்பினர் பாஸ்கர், கோவிந்த ராஜ்,

திண்டிவனம் நகர திரா விடர் கழக பொறுப்பாளர் கள் பாலசுந்தரம், விநாயக மூர்த்தி, பாவேந்தன், ராஜாராம், அருள், கன்னி யப்பன், செந்தில் வேலன், அன்பரசன், கௌரிஸ்ரீதர், குமார், சாந்தி பெருமாள், விஜயலட்சுமி, லட்சுமி பாவேந்தன், நிவேதா, தேன்மொழி, கஸ்தூரி, அமலா ரமேஷ் உள்ளிட் டோர் கலந்து கொண்டனர்.

மாநில இளைஞரணி துணைச் செயலாளர் தம்பி பிரபாகரன் அனைவருக் கும் நன்றி கூறினார்.



சிவகங்கை மாவட்டம் நகரம் பட்டியில் சுதந்திரப் போராட்ட வீரர் வாளுக்கு வேலி அம்பலம் பிறந்த நாளை முன்னிட்டு அவரது திருவுருவச் சிலைக்கு முன்னாள் அமைச்சர் – மாவட்ட கழக செயலாளர் கே ஆர்.பெரியகருப்பன் மாலை அணிவித்து மரியாதை செலுத்தினார். இதில் முன்னாள் அமைச்சர் திருமதி தமிழரசி ரவிக்குமார், மாவட்ட கழக துணைச் செயலாளர் த.சேங்கைமாறன் மற்றும் வாரிசு தாரர்கள் கலந்து கொண்டார்கள்.




கோவை வடக்கு மாவட்டத்திற்கு உட்பட்ட ஒன்றிய, நகர, பகுதி, பேரூர்க் கழக மாணவர் அணி அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள் ஆலோசனைக் கூட்டம் வடகோவை மாவட்டக் கழக அலுவலகத்தில் மாவட்டச் செயலாளர் தொண்டாமுத்தூர் அ.ரவி தலைமையில், மாணவர் அணி அமைப்பாளர் செ.அந்தோணிராஜ் வரவேற்புரையில் மாநில மாணவர் அணி துணைச் செயலாளர் வி.ஜி.கோகுல், மாவட்ட துணை அமைப்பாளர்கள் ஞா.சிவகுமார், தினேஷ்குமார், சரவணகுமாரி (எ) சரண்யா, மனோஜ் குமார், ராஜ்திலக் ஆகியோர் முன்னிலையில் நடை பெற்றது. இதில் ஒன்றிய, நகர, பகுதி, பேரூர்க் கழக அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள் பலர் கலந்து கொண்டனர்.